# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2025

## வளர்தமிழ் 8

சுட்டெண்: ____________________

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100


TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள்

அ) 30 ☐ ஆ) 217 ☐

இ) 216 ☐ ஈ ) 247 ☐

2. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலை எழுதியவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) கல்லடிவேலுப்பிள்ளை ☐

இ) கணியன் பூங்குன்றனார் ☐ ஈ ) இளங்கோவடிகள் ☐

3. தமிழர் தம் தாய்மொழியை அதன் இனிமை கருதித் ———— என்று போற்றுவர்.

அ) செந்தமிழ் ☐ ஆ) தீந்தமிழ் ☐

இ) பைந்தமிழ் ☐ ஈ ) முத்தமிழ் ☐

4. துணைவி என்பதன் எதிர்ப்பாற்சொல்

அ) துணைவன் ☐ ஆ) அண்ணன் ☐

இ) தமையன் ☐ ஈ ) பேரன் ☐

5. முல்லைத்தீவிற் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஆங்கிலேயரின் கோட்டையினை பண்டாரவன்னியனின் படையணிகள் தாக்கி அழித்த ஆண்டு

அ) 1811 ☐ ஆ) 1785 ☐

இ) 1803 ☐ ஈ ) 1812 ☐

6. ஆடினர் என்பது

அ) பலவின்பால் ☐ ஆ) ஒன்றன்பால் ☐

இ) பெண்பால் ☐ ஈ ) பலர்பால் ☐

7. “மல்லிகையொடு செவ்வந்திப் பூ மலிந்தன” இதில் மலிந்தன என்பது

அ) கரைந்தன ☐ ஆ) நிறைந்தன ☐
இ) விரைந்தன ☐ ஈ) பறந்தன ☐

8. பறக்கும் என்ற சொல்லின் விகுதி

அ) உம் ☐ ஆ) கும் ☐
இ) க் ☐ ஈ) பற ☐

9. வழிப்போக்கருக்கு உண்டியும் உறைவிடமும் வழங்கும் இடம்

அ) தாவளம் ☐ ஆ) பாசறை ☐
இ) அரண்மனை ☐ ஈ) அந்தப்புரம் ☐

10. அறிஞர்கள் கூடி எதிர்உரை செய்யும் அரங்கு

அ) அரங்கேற்றம் ☐ ஆ) வெள்ளோட்டம் ☐
இ) பட்டிமன்றம் ☐ ஈ) முற்றுகை ☐

11. ஐந்து + நூறு

அ) ஐந்நூறு ☐ ஆ) ஐன்நூறு ☐
இ) ஐநூறு ☐ ஈ) ஐனூறு ☐

12. ஏழைகளுக்காகவும் துன்புற்றோருக்காகவும் தன் வாணாள் முழுவதும் உழைத்தவர்

அ) மேரிகியூரி ☐ ஆ) அன்னைபூபதி ☐
இ) அன்னைதெரேசா ☐ ஈ) சிவகங்கை ☐

13. குருவி கீச்சிடும். அது போல ஆந்தை

அ) கூவும் ☐ ஆ) பேசும் ☐
இ) அகவும் ☐ ஈ) அலறும் ☐

14. சிறுமி பூங்காவில் ஓடி விளையாடினாள். இதில் விளையாடினாள் என்பதன் வினையடி

அ) விளையாடி ☐ ஆ) விளையாடு ☐

இ) விளை ☐ ஈ) ஆல் ☐

15. எதிர்மறை வினைச்சொல்

அ) ஓடிய ☐ ஆ) ஓடு ☐

இ) ஓடாத ☐ ஈ) ஓடி ☐

16. பன்றியின் இளமைப் பெயர்

அ) குட்டி ☐ ஆ) குருளை ☐

இ) கன்று ☐ ஈ) பறழ் ☐

17. தோள்கொடுத்தல் என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்

அ) அடக்கமின்றிப் பேசுதல் ☐

ஆ) உறுதுணையாக நின்று உதவுதல் ☐

இ) விடாப்பிடி ☐

ஈ) அளவின்றிச் செலவழித்தல் ☐

18. வாய்மை என்பதன் பொருள்

அ) கொடை ☐ ஆ) மேன்மை ☐

இ) உயர்வு ☐ ஈ) உண்மை ☐

19. கிறித்தவநெறி இலக்கியங்களில் ஒன்று

அ) தேம்பாவணி ☐ ஆ) திவ்வியப்பிரபந்தம் ☐

இ) திருவருட்பா ☐ ஈ) சீறாப்புராணம் ☐

20. தமிழீழம் போரினால் அல்லற்பட்டது. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

அ) காலவாகுபெயர் ☐ ஆ) இடவாகுபெயர் ☐
இ) குணவாகுபெயர் ☐ ஈ) சினையாகுபெயர் ☐

21. "நீங்கள் எல்லோரும் கலைவிழாவிற்கு வாருங்கள்" என்று ஆசிரியர் கூறினார். இச் சொல்லியம்

அ) கலப்புச்சொல்லியம் ☐ ஆ) கூட்டுச்சொல்லியம் ☐
இ) வினாச்சொல்லியம் ☐ ஈ) தனிச்சொல்லியம் ☐

22. மாமா அமெரிக்காவில் வாழ்கின்றார். இச் சொல்லியத்தில் வந்துள்ள வேற்றுமை

அ) 3 ஆம் வேற்றுமை ☐ ஆ) 4 ஆம் வேற்றுமை ☐
இ) 5 ஆம் வேற்றுமை ☐ ஈ) 7 ஆம் வேற்றுமை ☐

23. இலங்கையின் கடைசிச் சோழமன்னன்

அ) குலோத்துங்கன் ☐ ஆ) இராசராசன் ☐
இ) நரசிம்மபல்லவன் ☐ ஈ) இராசசிம்மன் ☐

24. "ஊரான ஊரிழந்தேன் ஒத்தப் பனைத்தோப்பிழந்தேன்" என்ற பாடல்

அ) நிமிர்வு ☐ ஆ) கழிவிரக்கம் ☐
இ) கனிவு ☐ ஈ) போற்றல் ☐

25. மீட்டுகிறாள் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) ஆள் ☐ ஆ) கின்று ☐
இ) கிறு ☐ ஈ) மீட்டு ☐

புள்ளிகள் 25

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

நமது நாடு நீர்வளத்தையும் நிலவளத்தையும் கொண்டது. நமது நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே சிறந்ததாகக் கருதப்பட்ட தொழில் உழவுத்தொழில். முற்காலத்தில் தமிழர் உழுதுண்டு வாழ்வதையே விரும்பினர். சீரைத் தேடின் ஏரைத் தேடு என்றார் ஒரு புலவர். ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு மழை இன்றியமையாதது. தாய் முகம் காணாப்பிள்ளையும் மழை முகம் காணாப் பயிரும் செழிப்படைவதில்லை. அதனால் தான் பயிர்கள் செழித்து வளர்வதற்கு வானத்திலே தவழும் முகிலையே நோக்கி வாழ்ந்தனர் தமிழர். உயர்ந்து ஓங்கிய மலைகளில் முகில்கள் தவழக் கண்டால் தமிழர் உள்ளம் மகிழும்.

1. நமது நாட்டில் பண்டைக்காலத்திலிருந்தே சிறந்ததாகக் கருதப்பட்ட தொழில் எது?

_______________________________________________

2. எதனால் தமிழர் உள்ளம் மகிழும்?

_______________________________________________

3. ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு எது இன்றியமையாதது?

_______________________________________________

4. முற்காலத்தில் தமிழர் எப்படி வாழ்வதை விரும்பினர்?

_______________________________________________

5. நமது நாடு எவ்வளங்களைக் கொண்டது?

_______________________________________________

புள்ளிகள் 10

TEDC -FR
TEDC -FR

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களில் ஒன்றைத் தருக.

_______________________________________________

2. "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று பாடியவர் யார்?

_______________________________________________

3. 'மும்முடிச்சோழ மண்டலம்' என அழைக்கப்பட்ட நாடு எது?

_______________________________________________

4. "உன்னைப் போல் எனக்கும் வாழ்வில் உலகத்தார் உயர்வு காணார்" இது யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

_______________________________________________

5. 'பைல்' கோட்டை அமைந்துள்ள இடம் எது?

_______________________________________________

6. எத்தனை வகைச் சிற்றிலக்கியங்கள் தமிழில் உள்ளன?

_______________________________________________

7. காளமேகப்புலவர் எவ்வூரைச் சேர்ந்தவர்?

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|


TEDC -FR

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## இயற்கை உணவு

| | | | | |
|---|---|---|---|---|
| உணவு | வளங்களை | முன்னோர் | இன்றி | அருமருந்து |

இயற்கை உணவை உண்போமே
இன்னல் ________________ வாழ்வோமே
செயற்கை உரங்களைத் தவிர்ப்போமே
உலகை மாற்றி அமைப்போமே

________________ வழியைத் தொடர்ந்தாலே
பின்னோர் வாழ்வு சிறந்திடுமே
இயற்கை ________________ப் பெருக்கியே
இனிய வாழ்வு வாழ்வோமே

துரித ________________ப் பழக்கத்தை
தூர ஓட்டி விடுவோமே
உணவே ________________ என்று
உரக்க உலகுக்குச் சொல்வோமே!

புள்ளிகள் 10

**5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

அதிகாலையில் எழுந்த உழவன் தோட்டத்தை நோக்கி விரைந்து சென்றான். மண்வெட்டி கொண்டு விளை நிலத்தைக் கொத்திப் பண்படுத்தினான். அங்கே உழவன் வெற்றிலை நட்டான். கடும் வெய்யிலில் வேலை செய்து களைத்த உழவன் நீரை மடமட எனக் குடித்தான். பின்னர் அருகில் இருந்த மரநிழலில் சற்று நேரம் ஓய்வெடுக்கின்றான்.

1. நிகழ்கால வினைமுற்று ஒன்று தருக.

______________________________

2. காலப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு?

______________________________

3. உழவன் வெற்றிலை நட்டான். இது எவ்வகை ஆகுபெயர்?

______________________________

4. இரட்டைக்கிளவி ஒன்று தருக.

______________________________

5. பெயரெச்சம் ஒன்று தருக.

______________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் எச்சவினைகள் எவ்வகையென இனங்கண்டு எழுதுக.**

1. கற்று ____________________

2. நடந்த ____________________

3. மடித்து ____________________

| புள்ளிகள் 03 |
|---|

**2. வில்போன்ற புருவம் என்ற உவமைத் தொடரின் உவமானம், உவமேயம் என்பவற்றைத் தருக.**

| | உவமானம் | உவமேயம் |
|---|---|---|
| வில்போன்ற புருவம் | | |

| புள்ளிகள் 02 |
|---|

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரக்கம் | அறை | புல் | அரை | புள் | இறக்கம் |

1. குண்டு விழுந்து வெடித்த நிலங்களில் ______________ பூண்டு எதுவும் முளைக்கவில்லை.

2. அப்பா கடையில் ______________ க் கிலோ தேயிலை வாங்கினார்.

3. கதிரவனின் வரவைக்கண்ட ______________ இனங்கள் அங்குமிங்கும் பறந்து திரிந்தன.

4. காணாமல் போன சிறுவனின் பெற்றோர் மீது மக்கள் ______________ காட்டினர்.

5. சமையல் ______________ யிலிருந்து கமகம என மணம் பரவியது.

புள்ளிகள் 05

## 7) பழமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை எழுதி நிறைவு செய்க.

1. துள்ளின ____________________ பொதி சுமக்கும்.

2. கடுகு சிறிதானாலும் ____________________ பெரிது.

3. ____________________ச் சொத்து மண்ணாய்ப் போய்விடும்.

4. நிழலின் அருமை வெயிலில் ____________________ .

5. உயரஉயரப் பறந்தாலும் ____________________ பருந்தாகுமா.

புள்ளிகள் 05

## 8) பொருத்தமான சொல்லை வைத்து குறளை நிறைவு செய்க.

1. முகம்நக நட்பது நட்பன்று ____________________

அகம்நக நட்பது நட்பு

( கஞ்சத்து, வஞ்சத்து, நெஞ்சத்து )

2. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை

எல்லா ____________________ தரும்

( அறமும், மறமும், நிறமும் )

புள்ளிகள் 05

TEDC -FR TEDC -FR

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- பண்டாரவன்னியன்
- தைப்பொங்கல்
- தமிழீழம்
- தூய்மையைப் பேணுவோம்.

புள்ளிகள் 15



TEDC -FR

TEDC -FR

TEDC -FR



TEDC -FR

TEDC -FR